**தேதி - 29.09.2022 அசல்வழக்கு எண்.106/2018 பி.சா.2 (சுப்பிரமணியன்)**

**வாதி தரப்பு குறுக்குவிசாரணை**

1 ம் பிரதிவாதிக்கு நான் பெரிய அக்காவின் கணவர் ஆவேன். 2 ம் பிரதிவாதி என்னுடை மகள். 1 ம் பிரதிவாதிக்கு நான் மாமனார் என்றால் சரிதான். பி.சா.ஆ.4 ல் வாதி மற்றும் 1 ம் பிரதிவாதிக்கு மட்டும் பாகம் ஏற்பட்டதாக நான் சொல்லியுள்ளேன் அதில் பெண்மக்களுக்கு (சகோதரிகளுக்கு) எந்தவித சொத்துக்களும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.4 ல் சாட்சி கையெழுத்து செய்த நபர்கள் யார் என்று பெயர் தெரியாது. ஆள் தெரியும். பி.சா.ஆ.4 ன் படி சொத்துக்கள் மாறவில்லை. அவர்கள் பெற்றோர் பெயரில் வாதி மற்றும் 1 ம் பிரதிவாதி பெயர்களில் உள்ளது. பி.சா.ஆ.4 ல் கண்டது போல் 1 ம் பிரதிவாதி வாதிக்கு ரூ.5,08,000 கொடுத்து எந்தவித இரசீதும் வாங்கவில்லை. வாதி மற்றும் 1 ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விபரம் எனக்குத் தெரியும். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பில் கண்ட விபரங்கள் எதுவும் எனக்குத் தெரியாது. பி.சா.ஆ.4 ஆவணத்தை எழுதியது குறித்து மட்டும் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.4 ன்படி எந்தவித நடைமுறைக்கும் வரவில்லை. பிரச்சனையாகத் தான் உள்ளது. பணத்தை கொடுத்துவிட்டால் பத்திரத்தை பதிந்து பிரச்சனை முடிந்துவிடும். அதனால் பணம் கொடுக்கப்படவில்லைஎன்றும், பி.சா.ஆ.4 ஆவணத்தின்படி பாகப்பிரிவினை நடைமுறைக்கு வரவில்லை என்று சொன்னால் சரிதான். நான் 1 ம் பிரதிவாதிக்கு மாமனார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.